## கொழும்பு பல்கலைக்கழகம் - 2014

கொழும்பு பல்கலைக்கழகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(1) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்து பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும், அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானது என முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகள் மற்றும் வெளிப்படுத்தல்களிற்கு ஆதாரமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நித அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4)ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கொழும்பு பல்கலைக்கழகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமம்**

இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமம் 07 இற்குப் பொருத்தமற்ற வகையில் மீளாய்வாண்டின் இறுதியில் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளக் கூடிய நிலையில் இல்லாதிருந்த ரூபா 8,105,737 கிரயம் செலவு செய்து நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் விடுதியின் குளியலறையும் மலசலகூடமும் மூலதனமாக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக திசெம்பர் மாதத்திற்காக ரூபா 33,731 தொகை பெறுமானத் தேய்விற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

**2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சிறீ பாலி மண்டபத்தில் 2014/2015 ஊடகத்துறையில் பட்டப்பின் படிப்பு கற்கை நெறி பூர்த்தியடைந்திருந்த போதிலும் அதற்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 540,000 தொகையான கற்கை நெறிக் கட்டணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் சேவையைக் கைவிட்டுச் சென்ற 27 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 963,348 தொகையான இடர், விழா, கணனி மற்றும் ஊழியர் கடன் மீதிகள் 05 ஆண்டுகளாகக் காணப்பட்டதுடன் இக்கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 போதிய அதிகாரத்தினால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்கள்**

பட்டப்படிப்பு கற்கைகள் பீடத்தில் புதிய கட்டிடத்தை நிர்மாணிக்கும் செயற்பாட்டை மேற்பார்வை செய்தல் தொடர்பான ஆலோசனை உடன்படிக்கையின் பிரகாரம் பல்கலைக்கழகத்தினால் மத்திய பொறியியல் சேவைகள் ஆலோசனைப் பணியகத்திற்கு ரூபா 2,995,373 தொகையை செலுத்துவதற்கு இணங்கியிருந்த போதிலும் பட்டப்படிப்பு கற்கைகள் பீடத்தின் புதிய கட்டிடத்தை மேற்பார்வை செய்வதற்காக தொழில்நுட்ப நிபுணத்துவம் அற்ற பீடத்தின் பிரதி பதிவாளர் நியமிக்கப்பட்டிருந்தார். அதற்காக 1994 இன்

14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்திலுள்ள ஏற்பாடுகள் மற்றும் நிதிக் குழு பரிந்துரைகளுக்கு முரணாக மாதாந்தச் சம்பளத்தில் 78 சதவீதமான படியாக ரூபா 522,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள்,பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 371 | (i) பிரமாணங்களின் படி ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வழங்கக் கூடிய முற்பணங்களின் உச்ச எல்லை ரூபா 20,000 ஆக இருந்த போதிலும் கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் பல்கலைக்கழகத்தினால் இரண்டு சந்தர்ப்பங்களின் போது ஒரு மில்லியனை மிகைத்து முற்பணம் வழங்கப்பட்டிருந்ததுடன் 41 விரிவுரையாளர்கள் பெற்றுக்கொண்டிருந்த ரூபா 4,395,760 தொகை 30 நாட்களிலிருந்து 316 நாட்கள் வரையான கால தாமதத்தில் தீர்த்து வைக்கப்பட்டிருந்தன. |
| | (ii) நூல் நிலையப் புத்தகங்களை கொள்வனவு செய்வதற்காக வெளியீட்டு நிறுவனத்திற்கு 2011 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்டிருந்த ரூபா 466,485 கூட்டுத் தொகையான முற்பணங்கள் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (iii) உரிய முறைப்படி மதிப்பீடு தயாரிக்கப்படாது முற்பணங்கள் வழங்கப்பட்டதன் காரணமாக பல்கலைக்கழகத்தினதும் சீறி பாலி மண்டபத்தினதும் மூன்று உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 769,005 கூட்டுத் தொகையான முற்பணங்களில் 44 சதவீதத்திலிருந்து 71 சதவீதம் வரையானவை சேமிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபனக் கோவைகள் | |
| (i) XX ஆம் அத்தியாயத்தின் 3.1 ஆம் பிரிவு மற்றும் X ஆம் அத்தியாயத்தின் 1.6.1 ஆம் பிரிவு | மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு தெரிவுப் பரிசோதனையின் போது கலைப்பீடத்தின் எட்டு பிரிவுகளில் கல்விசார் பதவியணியினரின் வருகைகள் வெளிச்செல்லல்கள் மற்றும் |

| | | |
|---|---|---|
| | | விடுமுறைகளுக்காக பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) XIX ஆம் அத்தியாயம் | பல்கலைக்கழகத்தினால் கையொப்பமிடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் உத்தியோகபூர்வ இல்லங்களில் குடியிருக்கும் உத்தியோகத்தர்களின் அடிப்படைச் சம்பளத்தில் 10 சதவீதம் வாடகையாக அறவிடப்பட வேண்டிய போதிலும் 2014 நவம்பர் 01 தொடக்கம் 2015 பெப்ரவரி 28 வரை குடியிருந்த உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 180,289 தொகை அறவிடப்பட வேண்டிய போதிலும் ரூபா 81,700 மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன் ரூபா 98,589 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. |
| (இ) | 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த அதிகாரச் சட்டத்தின் 6(1) (அ) பிரிவு | ஒப்பந்த உடன்படிக்கை கிரயம் ரூபா 05 மில்லியனை மிகைக்கும் சந்தர்ப்பத்தில் அனைத்து கேள்விதாரர்களும் பொது ஒப்பந்த பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளப்பட வேண்டிய போதிலும் உடன்படிக்கை பெறுமதி ரூபா.47,478,427 தொகையான 05 ஒப்பந்தங்கள் தொடர்பாக அவ்வாறு பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 15(v) பிரிவு மற்றும் 2010 ஒக்தோபர் 15 ஆந் திகதிய 932 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழுவின் சுற்றுநிருபம் | கொழும்பு பல்கலைக்கழகத்தின் 19 வெளிவாரிக் கற்கை நெறிகளுக்கும் சிறீபாலி மண்டபத்தின் 01 வெளிவாரிக் கற்கை நெறிக்கும் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2013 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 11/2013 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றுநிருபம் | பட்டப்பின்படிப்பு கல்வி நடவடிக்கைகளுக்காக கல்விசார் பதவியணியினருக்கு விடுமுறை வழங்கும் போது பட்டப்பின் படிப்பினைத் தொடருதல் தாம் சேவையாற்றும் பல்கலைக்கழகங்களுக்கு வெளியே ஏனைய பல்கலைக்கழகங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் கல்விப் பீடத்தின் 05 விரிவுரையாளர்கள் அதே பீடத்திலும் அவர்களில் மூன்று விரிவுரையாளர்கள் அப்பிரிவின் தலைவராக செயற்பாடுகளை மேற்பார்வை செய்துகொண்டு பட்டப்பின் படிப்பை மேற்கொண்டுள்ளார்கள். |

| | |
|---|---|
| (ஊ) 2004 சனவரி 26 ஆந் திகதிய 2004/நூநி/1 இலக்க தேசிய நூல் நிலையங்கள் மற்றும் ஆவணப்படுத்தல் சேவைகள் சபையின் சுற்றுநிருபம் | சிறீபாலி மண்டபத்தில் நடைமுறை ஆண்டிலோ அல்லது இதற்கு முன்னைய ஆண்டிலோ நூல் நிலையப் புத்தகங்கள் சம்பந்தமாக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (எ) பொது நிருவாகச் சுற்றுநிருபம் | |
| (i) 2007 ஒக்தோபர் 27 ஆந் திகதிய 09/2007 (III) மற்றும் 09/2007 (I) (V)ஆம் இலக்க சுற்றுநிருபம் | ஓய்வு பெற்ற ஒருவரை மீண்டும் சேவையில் ஈடுபடுத்தும் உச்ச அளவு காலம் 12 மாதங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்ததுடன் ஓய்வு பெற்ற ஒருவரை மீண்டும் சேவையில் ஈடுபடுத்தும் கால எல்லையின் போது பொருத்தமான பதிலாள் ஒருவரை இனங்கண்டு பயிற்சி வழங்கப்பட வேண்டிய போதிலும் ஓய்வு பெற்ற பிரதிப் பதிவாளர் ஒருவர் தொடர்ச்சியாக 07 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக சேவையியல் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் பதிலீட்டாளர் ஒருவரை இனங்கண்டு சேர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 2007 ஆகஸ்ட் 24 ஆந் திகதிய 09/2007 ஆம் இலக்க சுற்றுநிருபம் | உத்தியோகத்தர்களுக்கு நிரந்தரப் பதவிகளுக்குரிய ஏனைய வசதிகள் சம்பந்தமாக பொருத்தமான வகையில் பொதுத் திறைசேரியின் பரிந்துரைகளைப் பெற்றுக் கொள்ளாது பணி ஒப்படைப்பு அடிப்படையில் மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட இரண்டு ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டின் போதும் வதிவிடத்திலிருந்து சேவைக்குச் செல்வதற்கும் வருவதற்குமாக போக்குவரத்து வசதிகள் வழங்கப்பட்டிருந்தது.<br><br>ஓய்வு பெற்ற கல்விசார் மற்றும் கல்வி சாரா பதவியணியினரை மீண்டும் பல்கலைக்கழகத்தின் சேவையில் ஈடுபடுத்தும் போது வலியுறுத்தப்படுகின்ற சேவைத் தேவைப்பாடு, அதனை உள்ளடக்கக் கூடியதான மாற்று வழியைப் போல நிறுவனத்தை பேணிப் பாதுகாப்பதற்கு இணங்கிய வகையில் சேவை நிபந்தனைகள் உருவாக்குவது சம்பந்தமாக முகாமைத்துவம் கவனம் செலுத்தாத வகையில் நடவடிக்கை எடுத்துள்ளமை பற்றி நியமன நிபந்தனைகளைப் பரிசோதனை செய்கையில் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டதுடன் அதன் பிரகாரம் பல்வேறு நிதிசார் சிக்கல்களுக்கு |

| | | |
|---|---|---|
| | | முகங்கொடுப்பதற்கு பல்கலைக்கழகத்திற்கு சந்தர்ப்பம் உள்ளமை அவதானிக்கப்பட்டது. |
| (iii) | 2007 ஆகஸ்ட் 27 ஆந் திகதிய 09/2007 (i) ஆம் இலக்க சுற்று நிருபம் | அத்தியாவசியமான ஒரு பதவிக்கு பதிலாள் ஒருவரை நியமிப்பது சிக்கலாக இருக்கும் போதும் பதில் கடமை மூலம் உரிய பதவிக்கான செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாத சந்தர்ப்பத்திலும் மாத்திரம் அமைச்சு செயலாளரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் நியமனம் செய்யப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக 07 உத்தியோகத்தர்கள் 06 மாதங்களிலிருந்து 07 ஆண்டுகள் வரையான காலத்தின் போது செயல் ஒப்படைப்பு அடிப்படையில் இயக்குனர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தனர். |
| (ஏ) | 2010 ஒக்டோபர் 29 ஆந் திகதிய 05/2010 ஆம் இலக்க திறைசேரி செயற்பாட்டு சுற்றுநிருபம் | மாதாந்த சம்பளங்களைச் செலுத்தும் போது ஆபத்தினைக் குறைத்துக் கொள்ளுவதற்காக வங்கியில் வைப்பிலிடும் முறைமை ஒன்று பின்பற்றப்பட வேண்டிய போதிலும் 2015 பெப்ரவரி 26 ஆந் திகதிய பௌதீக பரிசோதனையின் போது பணம் வசூலிப்பவரின் கையில் ரூபா 5,139,744 பண மீதி காணப்பட்டதுடன் 381 கல்விசார் மற்றும் கல்விசாரா உத்தியோகத்தர்களின் மாதாந்தச் சம்பளமான ரூபா 17,250,260 தொகையாகிய மொத்தச் சம்பளத்தில் 21 சதவீதமா-னது ரூபா 100,000 இலிருந்து ரூபா 310,720 வரையான ஏனைய கொடுப்பனவுப் பணத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக பல்கலைக் கழகத்தின் நிதிசார் விளைவுகள் ரூபா 372,221,037 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த வகையில் முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 214,339,468 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான மிகை ரூபா 157,881,569 ஆல் அதிகரித்ததற்கு அரசாங்க மானியம் ரூபா 253,026,994 ஆல் அதிகரித்தமை பிரதான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கொழும்பு பல்கலைக்கழகம் மற்றும் சிறீபாலி மண்டபத்தினால் தயாரிக்கப்பட்ட கல்விசார் கால அட்டவணையில் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுவதற்குரிய திகதிகள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உள்வாரியான மாணவர்களுக்காக நடாத்தப்பட்ட பரீட்சைகளின் பெறுபேறுகள் 3 மாதங்களில் வெளியிடப்பட வேண்டிய போதிலும் 2013/2014 கல்வி ஆண்டின் போது முகாமைத்துவ பீடத்தின் உள்வாரி மாணவர்களுக்காக நடாத்தப்பட்டு வந்த வியாபார நிர்வாக பட்டப்படிப்பு பரீட்சையின் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பான தெரிவுச் செவ்வையின் போது முதலாம், மூன்றாம் மற்றும் ஐந்தாம் வருடாந்த பெறுபேறுகளை வெளியிடுவதற்கு 6 மாதங்களிலிருந்து 8 மாதங்கள் வரையான கால தாமதம் இடம்பெற்றிருந்தது.

(இ) மாணவர்களின் வருகைகளின் அடிப்படையில் பாடங்களுக்கான புள்ளிகள் 10 சதவீதத்திற்கும் 25 சதவீதத்திற்கும் இடையில் வழங்குவதும் வருகைகள் குறைவான மாணவர்களுக்கு பரீட்சையில் தோற்றுவதற்கு அனுமதி வழங்காதிருப்பதும் ஆகிய விடயங்களை உறுதிப்படுத்துவதற்காக குறித்துரைக்கப்பட்ட படிவத்தின் பிரகாரம் முறையாக மாணவர் வருகைப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

(ஈ) Master of Philosophy (Part time) 2012 கற்கை நெறிக்காக வழங்கப்பட்ட மாணவர் கையேட்டின் பிரகாரம் வருகைகள் ஆகக் குறைந்தது 70 சதவீதத்தை பூரணப்படுத்தாத மாணவர்களுக்கு ஆராய்ச்சி முறைமை (Research Methodology) இறுதிப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் கற்கை நெறியை வெற்றிகரமாகப பூர்த்தி செய்த மாணவர்களின் பட்டியலில் காணப்பட்ட 05 மாணவர்கள் கற்கை நெறிக்கு பங்குபற்றியுள்ளமையானது மாணவர் வருகைப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

### 4.2 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சிறீபாலி மண்டபத்தின் நூல்நிலையத்திற்காக 2013 யூலை 08 ஆந் திகதி பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 348,800 பெறுமதியான 40 கதிரைகளும் 07 மேசைகளும் கணக்காய்வுத் திகதியான 2015 மார்ச் 25 ஆந் திகதி வரையும் பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படாது வாசிப்பு மண்டபத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) சிறீபாலி மண்டபத்திற்குச் சொந்தமாக ஓடும் நிலையில் 05 வாகனங்கள் காணப்பட்டபோதிலும் இரண்டு சாரதிகள் மாத்திரம் உள்ளதனால் எந்த வேளையும் மூன்று வாகனங்களும் சபாரி வகையான ஜீப் வண்டியும் 06 ஆண்டுகள் காலமாக குறைந்த பயன்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டிருந்தது.

(இ) சிறீபாலி மண்டபத்தினால் இலங்கை வங்கியில் பேணப்பட்டு வந்த நடைமுறைக் கணக்கில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 5,529,295 தொகையான வங்கி மீதி காணப்பட்டிருந்ததுடன் 2014 சனவரி இலிருந்து திசெம்பர் வரை பொது வங்கி மீதி ரூபா 4,937,714 ஆக இருந்தபோதிலும் அப்பணம் குறுங்கால முதலீடுகளில் ஈடுபடுத்தப்படாது நடைமுறைக் கணக்கில் விளைவற்றுக் காணப்பட்டது.

(ஈ) மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் விசேட நிதியத்தின் கீழ்காட்டப்பட்டுள்ள ரூபா 4,211,513 தொகையான 11 மீதிகள் 03 ஆண்டுகளாகச் செயற்பாடற்றுக் காணப்பட்டது.

### 4.3 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு உடன்படிக்கைகளை மீறிய 31 விரிவுரையாளர்களிடமிருந்து பல்கலைக்கழகத்தினால் அறவிடப்படவேண்டிய ரூபா 34,747,649 தொகையானது விலாசத்தை கண்டறிய முடியாமை, பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளாமை ஆகிய காரணங்களினால் அறவிட முடியாமல் உள்ளது.

(ஆ) கொழும்பு பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான 07 விடுதிகள் மற்றும் வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட 03 விடுதிகளுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 5,040,000 செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் வாடகைக்குப் பெற்றுக்கொண்ட விடுதிகளில் 2,629 மாணவர்களுக்கு வசதிகள் வழங்கக்கூடியதாக இருந்த போதிலும் 2,223 மாணவர்களுக்கு மாத்திரம் வசதிகள் வழங்கப்பட்டிருந்தன.

(இ) நிதி நிலைமை கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 31,485,140,000 பெறுமதியான காணிகளின் உரிமையை உறுதிப்படுத்துவதற்காக காணி உறுதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு 2015 யூன் 29 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இக்காணிகளுக்காக வரைபடங்களைத் தயாரிப்பதற்கு தனியார் கம்பனி ஒன்றிற்கு 2015 யூன் 19 ஆந் திகதி ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழகத்தின் உரிய உத்தியோகத்தரினால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

(ஈ) சிறீபாலி மண்டபத்தின் ஒரு பெண் விரிவுரையாளருக்கு 2007 செப்தெம்பர் 22 ஆந் திகதியிலிருந்து 2008 திசெம்பர் 14 ஆந் திகதி வரை கல்வி விடுமுறை வழங்கப்பட்டிருந்த போதிலும் அவரின் கலாநிதிப் பட்டம் தொடர்பான எதுவித முன்னேற்றமும் பல்கலைக்கழகத்திற்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. 2010 நவம்பர் 16 ஆந் திகதிய 438 ஆவது இயக்குனர் சபைக் கூட்டத்தின் போது சேவையைக் கைவிட்டுச் சென்றதாக கருத்தில் கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் அவரிடமிருந்து பல்கலைக்கழகத்தினால் ரூபா 2,931,113 தொகை அறவிடப்படவேண்டியிருந்தது. இது தொடர்பாக பல்கலைக்கழகத்தினால் 2014 மார்ச் 04 ஆந் திகதி சட்டமா அதிபருக்கு கடிதம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் மூலம் நிதி ஏற்பாடுகள் வழங்கப்படாதிருந்தும் அமைச்சரவையின் அங்கீகாரமின்றி உலக வங்கியின் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தின் உதவியுடன் பல்கலைக்கழகத்தை வணிகமயப்படுத்தும் குறிக்கோளுடன் பல்கலைக்கழகத்தின் பதவியணியினரைப் பயன்படுத்தி பொறுப்பு வரையறுக்கப்பட்ட செல் கம்பனி தோற்றுவிக்கப்பட்டிருந்தது. 2014 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த நிதி ஆண்டிற்காக இதன் மூலம் ரூபா 2,540,469 வருமானம் உழைக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 1,935,908 செலவு செய்யப்பட்டிருந்தும் இது தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தல் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபடிகல் விடுமுறையைப் பெற்றுக் கொண்ட மூன்று விரிவுரையாளர்கள் அக்காலத்தின் போது சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் மற்றும் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றியிருந்ததுடன் உரிய நிறுவனங்களின் மூலம் ரூபா 3,068,793 கூட்டு மொத்தமான படிகள் செலுத்தப்பட்டிருந்தும் நிரந்தரக்கடமை நிலையமான கொழும்பு பல்கலைக்கழகத்தின் மூலமும் ரூபா 7,202,882 தொகையான சம்பளங்களும், படிகளும் செலுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க ஒரே மூன்று உத்தியோகத்தர்களுக்காக திறைசேரி நிதியத்திலிருந்து சம்பளங்களும் படிகளும் இரண்டு முறை செலுத்தியிருந்தமை கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டது.

**4.5 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்**

சுஜாதா ஜயவர்த்தன விடுதியின் நிர்மாண ஒப்பந்தமானது தனியார் கம்பனி ஒன்றிற்கு 2013 திசெம்பர் 24 ஆந் திகதி ரூபா 22,642,292 பெறுமதிக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அதனை 2014 யூன் 22 ஆந் திகதி பூர்த்தி செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. 2015 யூன் 30 ஆந் திகதியளவில் 373 நாட்கள் தாமதமடைந்திருந்த போதிலும் மொத்த ஒப்பந்தத்தில் 40 சதவீதம் அளவான நிர்மாண வேலைகள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தும் ரூபா 10,211,186 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எனினும் தாமதமடைந்த காலத்திற்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 747,195 தொகையான தாமதக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. மந்தமான நிலையில் நிர்மாண வேலைகளை மேற்கொண்டதன் காரணமாக ஒப்பந்த நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்காக ஆலோசகர் ஒருவரை நியமித்து அவருக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 727,000 தொகையான படிகள் செலுத்தப்பட்டிருந்தது.

**4.6 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011-2015 ஆம் ஆண்டிற்கான கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட ஆறு மாடிகள் கொண்ட பரீட்சை மண்டபம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக 2011 ஆம் ஆண்டின் போது நில அளவை மற்றும் பொறியியலாளர் படவரைவினைத் (Surveying and Preparation of Engineering Plan) தயாரிப்பதற்காக ரூபா 54,835 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் இக் கட்டிட நிர்மாணம் கைவிடப்பட்டிருந்தது.

(ஆ) பல்கலைக்கழகத்தினால் 300 மாணவர்களுக்கு வசதிகள் வழங்கக்கூடிய புதிய விடுதி ஒன்றினை (முத்தையா வீதி விடுதி) நிர்மாணிக்கும் செயற்திட்டம் 2005 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டு அதற்காக 2005, 2006 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் ரூபா 268,052 தொகை செலவு செய்யப்பட்டிருந்தும் செயற்திட்டம் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தது.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 செயல் நடவடிக்கைத் திட்டம்**

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ /12 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 5.1.2 ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு செயற்பாடு தொடர்பான பொறுப்பை ஒவ்வொரு உத்தியோகத்தருக்கும் ஒப்படைக்கும் வகையில் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் சிறீபாலி மண்டபத்தின் உத்தியோகத்தர்களுக்கு பொறுப்புக்கள் ஒப்படைக்கும் வகையில் செயல் நடவடிக்கைத்திட்டம் தயாரிக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

**5.2 பதவியணியினர் வெற்றிடங்களை நிர்வகித்தல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பல்கலைக்கழகத்தின் கல்விசார் பதவியணியின் மற்றும் சிறீபாலி மண்டபத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் முறையே 658 மற்றும் 123 ஆக இருந்ததுடன் உள்ளபடியான பதவியணியினர் முறையே 522 மற்றும் 93 ஆக இருந்தமையால் வெற்றிடங்கள் முறையே 136 மற்றும் 31 மற்றும் சிறீபாலி மண்டபத்தில் ஒரு பதவி மிகையாகவும் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) காணி மற்றும் கட்டிடங்கள் மேற்பார்வைப் பிரிவில் வேலை கண்காணிப்பு பதவி 8 மாதங்களாகவும் கல்லூரி இல்லங்களைப் பரிபாலிக்கும் பிரிவில் வெற்றிடமாக

இருந்த பிரதி / உதவி பதிவாளர்களுக்கான 3 பதவிகள் 06 மாதங்களிலிருந்து 08 ஆண்டுகள் வரையான காலப்பகுதியாகவும் பணி ஒப்படைப்பு அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வந்திருந்ததுடன் புதிய ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பரிசோதனை செய்யப்பட்ட மாதிரிகளின் பிரகாரம் பிரதிப் பதிவாளருக்கான ஒரு பதவியும் சிரேஷ்ட பதிவாளர் பதவியும் வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் பௌதீகக் கல்விப் (விளையாட்டுக்கள்) பிரிவின் 02 பணிப்பாளர் பதவிகள் 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக பதிற் கடமை அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது பல்கலைக்கழகத்தில் உபவேந்தரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) நிதிக்கட்டுப்பாடு
(ஆ) ஒப்பந்த நிர்வாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(உ) ஆளணி முகாமைத்துவம்